[1972 மார்ச் 9

திருநெல்வேலி மாவட்டத்திற்குப் பாசன வசதிகள்

*** 390 வினா—திரு. எம். முத்தையா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்குத் தொடர்ச்சி மலையில், உற்பத்தியாகும் சிற்றாறுகளை யெல்லாம் இணைத்து, நெல்லை மாவட்டத்தில் அதைப் பாசனத்திற்குப் பயன்தரும் வகையில் ஏற்படுத்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு குழு பரிசீலனை செய்ததா ?

(இ) ஆம் எனில், அந்தக் குழு அளித்துள்ள அறிக்கையின் முழு விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் சிற்றாறுகளை யெல்லாம் இணைத்துத் திருப்பிவிடப் போவதாகச் சொல்லப்பட்டது. வறண்ட பகுதியாக இருக்கும் நெல்லை மாவட்டத்திலுள்ள சங்கரன்கோவில் போன்ற பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தால் எந்தக் குழுவும் நியமிக்கப்படவில்லை. மத்திய அரசிலிருந்து இரிகேஷன் கமிஷன் ஒன்று தமிழ் நாட்டிற்கு வந்த நேரத்தில், இதுபற்றி எடுத்துச் சொல்லி, இந்தத் திட்டத்தினால் நெல்லை மாவட்டம் பயன் அடையும் என்று தெரிவித்தோம். எங்களுடைய யோசனையை அந்தக் கமிஷனும் ஒப்புக் கொண்டிருக்கிறது. திட்டவட்டமான செயற்குறிப்பு ஒன்று அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டது. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலுள்ள மணிமுத்தாறு அணையிலிருந்து வரும் கால்வாய் திருச்செந்தூர், நாசரத்பேட்டை, சாத்தான்குளம் வழியாகத் தண்ணீர் பாய வழிவகைகள் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் கால்வாய்கள் எல்லாம் அகலமாக இல்லாமல் குறுகியதாக அமைந்திருப்பதால் சிரமம் ஏற்படுகிறது. மேலும்

1972 மார்ச் 9]

பெரிய கால்வாய்களிலிருந்து குளங்களுக்குத் தண்ணீர் செல்வதற்கான இணைப்புக் கால்வாய்கள் இல்லாமல் இருக்கின்றன. இணைப்புக் கால்வாய் இல்லாத காரணத்தால், தண்ணீர் ஒரு குளத்திற்குப் பாய்ந்து பின்னர் அடுத்த குளத்திற்குப் போக வேண்டியிருக்கிறது. இந்த ஆண்டிலே மணிமுத்தாறு அணை நிரம்பி வழிந்த நேரத்திலேகூட அந்தப் பகுதிகளிலே தண்ணீர் கிடைக்காத நிலைமை இருக்கிறது. ஆகவே, கால்வாய்களை அகலப் படுத்தி, இணைப்புக் கால்வாய்களை வெட்டித்தர அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நீண்ட கேள்விக்குப் பிறகு என்னால் பதில் சொல்ல இயலவில்லை. இருந்தாலும் குறிப்பிட்டு எழுதிக் கொடுத்தால், தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வசதியாக இருக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உற்பத்தியாகி, அரபிக்கடலில் விழும் ஆறுகளில் எந்த எந்த ஆறுகளைத் திருப்பிவிடலாம் என்பதைக் குறித்து கேரள மாநில அரசோடு இது சம்பந்தமாகப் பேச்சு வார்த்தை நடந்ததா ? இந்தச் சபையில் அந்த விவரங்களை வெளியிடுவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே. கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தவில்லை. இதுகுறித்து மத்திய அரசிலிருந்து வந்த இரிகேஷன் கமிஷனிடம் விவரமாகச் சொல்லியிருக்கிறோம். அதுகுறித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன் அரசாங்கத்தின் குறிப்பு ஒன்று தயாரிக்கப்படுகிறது.

திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆறுகளைத் திருப்பி விடுவதைப்பற்றிப் பரிசீலனைகள் நடக்கின்றன என்பதைக் குறித்துச் சொன்னார். மதுரை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களும் வறண்ட பகுதிகளாக இருப்பதால், அதைக் குறித்தும் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமா ? மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி, அரபிக் கடலில்போய் விழும்

[1972 மார்ச் 9

ஆறுகள் கேரளப் பகுதிகளில் எத்தனை ? அவற்றின் தண்ணீரை எப்படி நாம் பயன்படுத்தலாம் என்பதைக் குறித்து ஆராய ஒரு தனிக் குழுவை அமைத்துச் செயல்பட முயற்சி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி அரபிக்கடலில் விழும் ஆறுகளை நெல்லை மாவட்டத்திற்குப் பயன்படுத்தும் திட்டம் என்பதாகும். மதுரை மாவட்டத்தைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து புறப்படுகின்ற நதிகள் தண்ணீரை நெல்லை மாவட்டத்திற்குப் பயன்படுத்தும் திட்டத்திற்கு என்ன செலவாகும் ? அதற்கு ஒரு எஸ்டிமேட்டாவது அரசாங்கம் தயாரித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, பொதுமக்களின் நன்மையைக் கருதி, இதற்கு விடையளிக்கவில்லை.

திரு. கா. மு. கதிரவன் : தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் அச்சன் கோவிலாறு அரபிக் கடலில் போய் விழுகிறது. நெல்லை மாவட்டத்திற்கு அதைப் பயன்படுத்தும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, எல்லா ஆறுகளும் சிற்றாறுகள்தான். அவற்றை நெல்லை மாவட்டத்திற்குத் திருப்பி விடுவதற்கான சாத்தியக் கூறுகளை அரசு பரிசீலித்து வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, வழக்கம் போல் நாம் மத்திய அரசுக்கு எழுதி, அவர்களுடைய அனுமதியைப் பெறுவதற்குள் கேரள மாநிலம் அந்த ஆறுகளைப் பயன்படுத்திக் கொண்டாலும் பயன்படுத்திக் கொள்ளும். ஆகவே மத்திய அரசாங்கத்தின் குறிப்புகளுக்காகக் காத்திராமல், நேரடியாக கேரள அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி, பின்னர் மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லி, என்ன என்ன செய்ய வேண்டுமோ அப்படிச் செய்ய அரசு முன்வருமா ?

1972 மார்ச் 9]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, நம்முடைய அரசும் இதைப்பற்றிய விவரங்களைச் சேகரித்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு குறிப்பு அனுப்பியிருக்கிறோம்.

மேல்மலையனூர் பெரிய ஏரியிலிருந்து வரத்துவாய்க்கால்

*** 391 வினா—திரு. ரா. ரா. முனுசாமி:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டம், மேல்மலையனூர், பெரிய ஏரியில் இருந்து ஈயக்குளம் ஏரிக்கு வரத்து வாய்க்கால் வெட்ட வேண்டிய வேலை கைவிடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) செஞ்சி வட்டம், மேல்மலையனூர் பெரிய ஏரியிலிருந்து ஈயக்குளம் ஏரிக்கு வரத்து வாய்க்கால் வெட்டும் திட்டம் எதுவும் இதுவரை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆகையால் இவ் வேலை கைவிடப் பட்டுள்ளதா என்ற கேள்விக்கு இடமில்லை.

(இ) இக் கேள்வி எழாது.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, மேல்மலையனூரில் இருந்து சங்கராபரணியூர்வரை சென்று மேல்மலையனூர் தண்ணீர் வீணாகக் கடலில் சென்று விடுகிறது. மேல்மலையனூரிலிருந்து ஈயக்குளம் நான்கு பர்லாங் தூரத்தில்தான் இருக்கிறது. ஈயக் குளம் ஏரிக்குத் தண்ணீர் வந்தால் அதை யொட்டிய ஏம்பலம், சாத்தாபுத்தூர், சித்தாபுத்தூர், தாத்தபுத்தூர் போன்ற ஆறு ஏரிப் பகுதிகளுக்கும் தண்ணீர் கிடைப்பதன் மூலமாக இரண்டாயிரம் ஏக்கர் வரை விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய அளவில் இருக் கின்ற அந்த வரத்துக் கால்வாயைச் செப்பனிட்டுத் தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: உறுப்பினர் அவர்கள் மேல்மலையனூரிலிருந்து ஈயக்குளம் ஏரிக்கு வரத்துக் கால்வாய் வெட்டும் திட்டம் உண்டா என்று கேட்டார்கள், இல்லை என்று சொன்னேன். அது ஒரு சிறு பாசன ஏரிதான். அதன்